# டி. செல்வராஜ் புதினங்களில் படைப்பாளுமை

***திருமதி சி. சாந்தி***
முனைவர் பட்ட ஆய்வாளர்
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
போப் கல்லூரி, சாயர்புரம், தூத்துக்குடி மாவட்டம்

**மலர்: 11**

**சிறப்பிதழ்: 2**

**மாதம்: ஜூலை**

**வருடம்: 2023**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v11iS2i3-July.6451

***முன்னுரை***

*படைப்பிற்கும் படைப்பாளனுக்கும் பின்புலம் என்பது இன்றியமையாதது. ஒரு படைப்பு எழுவதற்கும், படைப்பாளன் எழுதுவதற்கும் ஒரு மன எழுச்சி ஏற்பட வேண்டும். இந்த மன எழுச்சி படைப்பெழுச்சியாக மாறி, தக்கதொரு வடிவம் கொண்டு வாசகத் தளத்திற்கு முழுமையான படைப்பாக வந்து சேர்கின்றது. ஒரு படைப்பு முழுமையான படைப்பாக, வெற்றிகரமான படைப்பாக அமைய அதன் வடிவம், அதன் கருத்து, அதன் நடை, அதன் பொதுமைத்தன்மை, அதன் பன்முகத்தன்மை, இலக்கியத் தன்மை போன்ற பல நிலைகள் காரணங்களாக அமைகின்றன. இக்காரணங்கள் வலுப்பெற்று வெற்றிகரமான படைப்பாக மிளர்ந்த ஒன்று காலாகாலத்திற்கும் அழியாமல் சமுதாயத்தால் பாதுகாக்கப்பட வேண்டிய ஒரு நிலைக்கு வந்தடைகின்றன. அந்த வகையில் டி.செல்வராஜ் என்னும் தனிமனிதன் தன் காலச் சூழலில் நின்றுகொண்டு, இன்றைய சமுதாயத்தின் நெறிகாட்டு இலக்கியங்களாக முன்னோடி இலக்கியங்களாக அமைந்து சிறக்கும் வகையில் பல்வேறு படைப்புகளை தமிழிலக்கியத்திற்கு வழங்கியுள்ளார். அவற்றில், தான் வாழ்ந்த காலத்தின் மீது கொண்டிருந்த விருப்பு வெறுப்புகளையும், எதிர்கால சமூக மாற்றங்களையும் விரும்பி இலட்சிய நோக்கோடு பல உன்னத கருத்தாழமிக்க கவிதைகளை இனிமையும் எளிமையும் அமைந்த செந்தமிழ் நடையில் அழகுற படைத்தளித்துள்ளார். அவரது படைப்பின் வழி தமிழ்ச் சமூகமும் தமிழிலக்கியமும் அடைந்த பெரும் பயனையும், இன்னபிற சமூக சிந்தனைகளையும் வெளி க்கொணர்ந்து தமிழிலக்கியத்திற்கு ஏதேனும் ஒரு பரிமாணத்தில் உந்துசக்தியாக அமையும் என்ற எண்ணத்தில் இவ்வாய்வுக் கட்டுரை எழுதப்பட்டுள்ளது.*

## ஆளுமை

ஆளுமை என்பது என்ன? என்பது பற்றி உறுதியான எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட வரையறை இல்லை. உளவியல் நோக்கில் ஆளுமை என்பது ஒருவரின் ஒழுங்கமைந்த, இயங்கியல் பண்புகளும், அவை தோற்றுவிக்கும் தோரண நடத்தைகள், உணர்வுகள், சிந்தனைகளையும் குறிக்கிறது. பொது வழக்கில் ஆளுமை என்பது ஒருவரின் வெளித் தோற்றத்தைப் பெரிதும் குறிக்கிறது. ஆளுமை என்பதைச் சுருக்கமாக “ஒருவரைத் தனித்துவமானவராக ஆக்கும் எண்ணங்கள், உணர்வுகள், நடத்தைகள் என்பவற்றாலான ஒன்று” என வரையறுக்கலாம்.

அத்துடன் ஆளுமை ஒருவரின் உள்ளிருந்து உருவாகி அவருடைய வாழ்க்கைக் காலம் முழுதும் சீராக அமைகின்றது.

## ஆளுமை - சொல் - பொருள் விளக்கம்

"ஆளுமை" என்ற தமிழ்ச் சொல்லை ஆங்கிலத்தில் "Personality" என்று குறிப்பர். மேலும், "Personality" எனும் சொல் "Persona" எனும் இலத்தீன் மொழிச் சொல்லிலிருந்து பிறந்ததாகும் *(அ.மீனாட்சி சுந்தரம், 2009:215)*. ஆளுமை என்பதற்கு பல்வேறு அறிஞர்கள் பல்வேறு வரையறைகளைத் தந்துள்ளனர். அகராதிகள். கலைக்களஞ்சியம், வாழ்வியல் களஞ்சியம் ஆகியவற்றில் இவை குறித்த வரையறைகள் காணப்படுகின்றன. இங்கு ஆய்வுக் கட்டுரையின் அளவைக் கருத்தில் கொண்டு வாழ்வியல் களஞ்சியம் கூறும் வரையறையை மட்டும் கொடுக்கப்பெற்றுள்ளது. "தனிமனிதனுடைய எண்ணங்கள், செயல்படும் முறை, நடத்தைகள், அவன் பிறரிடம் பழகும் முறை, மனப்பான்மைகள், அவன் வாழ்க்கையைப் பற்றிக் கொண்டுள்ள கண்ணோட்டம், அறிவாற்றல், உணர்ச்சி வெளிப்பாடுகள் ஆகிய பல கூறுகள் இணைந்த தொகுப்பிலிருந்து அவனுக்கு ஏற்படும் ஒரு தனித்தன்மையே அவனது ஆளுமை எனப்படும்" என விளக்குகிறது *(வாழ்வியற் களஞ்சியம், தொகுதி - II)*.

## இலக்கியமும் ஆளுமையும்

"இலக்கியமும் ஆளுமையும்" எனக் காணும் போது, 1.இலக்கியப் படைப்பாளிகளின் ஆளுமை, 2.இலக்கியத்தில் பயின்றுவரும் பாத்திரஙகளின் ஆளுமை, 3. இலக்கியம் ஆளுமை வளர்ச்சிக்கு உந்து சக்தியாக அமைவதைக் காண்பது என மூன்று நோக்கு நிலைகளில் காணவேண்டும் என்கிறார் இரா.காஞ்சனா *(2015:124)*. மேலும் அவர் "இலக்கிய வழி ஆளுமை வளர்ச்சிக்கு வித்திடப்படுவதையும் காணமுடியும்" என்கிறார். இக்கருத்தின் மூலம் இலக்கியம் ஒரு படைப்பாளியின் ஆளுமையைத் தீர்மானிக்கிறது என அறிந்துகொள்ள முடிகின்றது.

## படைப்பாளியின் ஆளுமை

படைப்பாற்றல் என்பது மனிதர்கள் எல்லோரிடத்திலும் காணப்படுகின்ற பொதுமைப் பண்பு அல்ல. அது ஒரு சிலரிடம் மட்டுமே காணப்படுகின்ற ஒரு தனிப்பண்பு. அதிலும் இலக்கியப் படைப்பாற்றல் என்பது கற்றுத்துறை போகிய சான்றோருள்ளும் மிகமிகச் சிலரிடம் மட்டுமே காணப்படுகின்ற பெருமைக்குரிய ஆளுமைப்பண்பாகக் கருதப்படுகின்றது.

ஒவ்வொரு படைப்பாளிக்கும் தனித்தனி ஆளுமை உண்டு. அவர்களுக்கென தனித்த பண்புகள் உண்டு. இத்தகைய, "படைப்பாளிகளின் தனிமனித ஆளுமைப் பண்புகளை வெளிக்கொணர அவர்களது படைப்புகளை முதன்மை ஆதாரமாகக் கொண்டாலும் அவர்களது பிற எழுத்துக்கள் அவர்களைப் பற்றிய பிறரது திறனாய்வுகள், அவர்களது நாட்குறிப்புகள், வரலாற்றுச் செய்திகள், அவர்கள் எழுதிய கடிதங்கள், அவருக்குப் பிறர் எழுதிய கடிதங்கள், பதிவுசெய்யப்பட்ட பிற ஆதாரங்கள் போன்ற பலவற்றையும் துணைமை ஆதாரமாகக் கொள்வது அவசியம். அப்போதுதான் அவர்களது ஆளுமை பற்றிய நம் கணிப்புகள் சரியானதாக அமையும்" என்கிறார் *(இரா. காஞ்சனா,2015:125)*.

ஒரு படைப்பாளியின் படைப்பு ஆளுமையை உணர்ந்துகொள்ள "படைப்பாளியின் தானெனும் உணர்வு (ego), சுயம் (self), ஆளுமை (Personality)" பற்றி விளக்கப்பட்டிருப்பதைக் காணவேண்டும். இத்தகைய வரையறைகளை உள்வாங்கிக் கொண்டு எழுத்தாளர் செல்வராஜின் படைப்புகள், அவருடைய விமர்சனங்கள், அவர் இலக்கியத்தின் மீது கொண்டுள்ள ஆழம், அறிவியல் பார்வை மற்றும் அவர் மேற்கொண்டுள்ள சில பண்புகளின்

அடிப்படையில் படைப்பாளியின் ஆளுமை பற்றி ஆராயப்பெற்றுள்ளது.

## பாத்திரப் படைப்பு

பாத்திரப் படைப்பு சமுதாயத்தில் நிகழும் முரண்பாடுகளை வெளிப்படுத்தும் கருவியாக இருக்கிறது. பாத்திரங்கள் உயிருள்ள மனிதர்களாக இருப்பது போல கதைக்கு உயிரோட்டத்தைத் தருவது பாத்திரங்களே ஆகும். பாத்திரங்கள் உண்மையான மனிதர்களாக உலவவேண்டும். சமுதாய உறவுகளில் மனிதன் பின்னப்பட்டிருப்பதைப் போலவே நாவலிலும் பாத்திரங்கள் சமுதாயத்தில் உறவுடையவனாய் அமைய வேண்டும். உண்மையான மனிதர்களை எவ்வளவுக்கு ஆசிரியர் நாவலில் கொண்டுவருகிறாரோ அந்த அளவுக்கு அவர் வெற்றிபெறுகிறார்.

## பாத்திரச் சிறப்பறியும் கூறுகள்

பாத்திரத்தின் சிறப்பினை அல்லது பண்பினை வெளிப்படுத்துவதற்கு முக்கிய ஆசிரியர்களாக பல உத்திகளை கையாளக் கூடியவர்கள் நாவலாசிரியர்கள். அவை பாத்திரங்களின் தனித்தன்மையை அறிவதற்கு உதவுகின்றன.

## நாவல் மாந்தர் வகைகள்

நாவலில் இடம்பெறும் பாத்திரங்களை அவற்றின் செயல் திறனுக்கேற்ப இருவகையாகப் பிரிப்பர். அவை

1. முதன்மைமாந்தர்
2. துணைமைமாந்தர்

## முதன்மை மாந்தர்

முதன்மைமாந்தர் இல்லாவிட்டால் கதை இல்லை. இவரே கதையின் வளர்ச்சிக்குத் துணை நிற்பவராவர். ஆசிரியர் முதன்மை மாந்தரை எந்த அளவிற்கு சிறப்பித்துக் காட்டுகிறாரோ அந்த அளவிற்கு நாவலானது மக்களிடத்தில் சிறப்புபெறுகிறது.

## துணைமை மாந்தர்

கதையின் வளர்ச்சிக்கும் அதன் சிறப்பிற்கும் துணைபுரிபவர் துணைமை மாந்தராவார். இம்மாந்தர்கள் கதை சிறக்க மேலும் துணைபுரிகின்றனர்

## மனிதநேயம்

மனிதம் என்பது மனிதநேயத்தைக் குறிக்கும் ஒருவளமான சொல்.மனிதநேயம் என்பது புனிதம் நிறைந்த செயல். மனிதநேயம் அன்பு, ஆறுதல், நேர்மறை உணர்வு, இரக்க சிந்தனை, கருணைஉள்ளம், சமூகஅக்கறை என்றும் போற்றப்படுகிறது.

**"தன்னுயிர் போல மன்னுயிரையும் பாவித்தல்"**

என்கிறவிடயமே மனிதநேயமாகும். உதவி செய்ய முடியாத பொழுதும் கூடஅவர்கள் மனம் ஆறுதல் அடையும் படியாக நான்கு வார்த்தைகள் ஆறுதலாக பேசிசெல்வதும் மனிதநேயம் தான்.

**"அன்பின் வழியதுஉயர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு"**

என்கிறார் திருவள்ளுவர்.

மாரியம்மாவின் இயற்கையான குணம் இது போன்ற சந்தர்பங்களில் மனதை அடக்கிக் கொண்டு சும்மா இருக்க முடியாது. இறந்து போனவரின் சடலத்தின் முன் நின்று ஒருபொட்டு கண்ணீராவது வடித்தால் தான் அவள் மனம் அமைதிகொள்ளும். இல்லை என்றால் நாளெல்லாம் அதையே நினைத்துக் கொண்டிருப்பாள். (தேநீர். பக்:227)

## விவசாயம்

இந்தியச் சமுதாயங்கள் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டு இயங்கி வருகின்றன. விவசாயம் இல்லாவிட்டால் இந்நியப் பொருளாதாரமே அழிந்துவிடும். விவசாயத்தைக் கிழ்தரமான தொழிலாகப் பாவிக்கும் மனப்போக்குச் சமுதாயத்தின் அழிவுக்கு வழிவகுக்கும்.

**"சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்**
**உழந்தும் உழவே தலை"**

என்கிறார் திருவள்ளுவர்.

மழையை எதிர்பார்த்துக் காத்திருக்கும் விவசாயின் வேதனையை கவிஞர் வைரமுத்து,

**"பொருட்மழை பெய்யலையே**
**புழுதி அடங்கலையே**
**ஊச்சி நனையலையே**
**ஊள்காடு உழுகலையே"**

என்ற வரிகளில் புலப்படுத்துகிறார்.

ஊரில் மழையே இல்லை. இரண்டு வருஷமாகப் புமியில் ஒரு சொட்டு மழைத்துளி கூட விழவில்லை.

கிணறுகள் எல்லாம் வறண்டு கிடந்தன. தண்ணீர் எடுப்பதற்குத் தோண்டிகளை கிணற்றுக்குள் போட்டால் தரையில் போய் டங்கென்று மோதிக்கொள்ளும். சகதியையும் மணலையும் தான் வாரிக்கொண்டு வரும் தண்ணீர் மட்டும் கிடைக்காது. தண்ணீர் எங்கோ புமாதேவியின் நெஞ்சுக்குள் மறைந்து கொண்டு கண்ணாமூச்சி விளையாடுவதைப் போல் கிராம மக்கள் தண்ணீருக்காக அலைந்தார்கள். *(மலரும் சருகும் : ப.102)*

## கல்வி ஆளுமை

கல்வி என்பது நாட்டில் உள்ள ஒவ்வொரு குழந்தைக்கும் அடிப்படை உரிமையாக காணப்படுகிறது. கல்வி உரிமை என்பது அனைவருக்கும் இலவசமான கட்டாய தொடக்க கல்வியைப் பெற்றுதருகிறது. கல்வி உரிமையானது, படிப்பறிவின்மை, இளைஞர்கள் அவர் தம் மனித உரிமையையும் அடிப்படை சுதந்திரங்களை மதிப்பதற்கும் கல்வி பயிலுதலில் பாகுபாட்டை அழிப்பதற்காகவும் பயன்படுகிறது.

**ஆயுதம் செய்வோம் நல்லகாகிதம் செய்வோம்**
**ஆலைகள் வைப்போம் கல்விச்சாலைகள் வைப்போம்**
**ஓயுதல் செய்யோம் செய்யோம் தலை சாயுதல் செய்யோம்**
**ஊண்மைகள் சொல்வோம் பலவண்மைகள் செய்வோம்**

மாரியம்மாளுக்கு அழுகை பீறிட்டுக் கொண்டுவந்தது. வாய்விட்டு கதறினாள்

**"நீபடிச்சபுத்தவமும் பாடியழுவுதடா!**
**எடுத்தஏடும் புத்தவமும்**
**ஏங்கியழுவுதடா!**
**மைக்கூடும் பேனாவும்**
**மயங்கியழுவுதடா!**
**எங்கேண்ணுகேக்குதடா**
**என்னசொல்லி**
**நானழுவ!"(தேநீர்.பக்:238)**

## சமுதாய ஆளுமை

தமிழ்ச் சமுதாயத்தை பிடித்துள்ள பெரு நோய்களில் ஒன்று சாதிப்பாகுபாடு. தொடக்கத்தில் தொழிலின் அடிப்படையில் பின்பற்றப்பட்ட சாதிகள் இன்று பிறப்பினை அடிப்படையாகக் கொண்டு மாற்றம் பெற்றுவிட்டன.

**"இன்னும்**
**தீப்பந்தம் தேவை**
**ஜாதியின் சடலம் எரிக்க"**

என்று கவிஞர் வைரமுத்து கூறுவதிலிருந்து சமூகத்தில் நிலவும் சாதி என்னும் பெருநோய் வேரூன்றி இருப்பதனை அறிய முடிகிறது.

**"மிக்கு உயர்ந்த சாதி ,கீழ்ச்சாதி என்னும்**
**வேற்றுமைகள் தமிழுக்கில்லை, தமிழர்கில்லை**
**போய்கூற்றே சாதி எனல்"**

என்ற வரிகள் மூலம் பாரதிதாசன் தமிழர்களுக்குச் சாதி இல்லை என்ற உண்மையை உணர்த்தியுள்ளார்.

"கிறிஸ்தவனாயிட்டா சாதி வித்தியாசம் கிடையாது. ஆண்டவன் சந்நிதானத்திலே எல்லாரும் சமமின்னு ஒதேசியாரும் தினம் பிரசங்கம் பண்ணுதாரு. என்னடா பறப்பயல் நாடாத்தி ஒருத்தியைக் கட்டிக் கிட்டா குடி முழுகியாப் போவுது. என்னவோ ஒலகமே தலைகீழாய்ப் புறண்டு போனமாதிரி நாடானுவ எல்லாம் குதியாக் குதிக்கானுவ. பறப்பயலுக்கு இவ்வளவு திமிரா? கொழுப்பேறிப் போச்சு? பனம்

பாளைச் சீவுற மாதிரி சீவிப் போடுதேன் பாருண்ணு தானியேல் நாடன் குதியாக் குதிக்கான் பறக்குடி கிறிஸ்தவங்களும் விட்டுக் கொடுக்கிற மாதிரியில்லே.சபை என்னாகப் போவுதோ,ஏதாவப் போவுதோ, கடவுள்தான் காப்பாத்தணும்.

(மலரும் சருகும் ப.10)

**பெண்ணாளுமை (தாய்மை)**

தாய்மை என்பது பெண்ணுக்குரியது என்பர். குறிப்பாக குழந்தை பெற்ற பெண்ணுக்குரியது. "பெத்தமனம் பித்து பிள்ளைமனம் கல்லு" போன்ற பழமொழிகளின் ஊடாகவும் தாய்மையின் இலக்கணம் வெளிப்படுகிறது. பெற்றால் தான் தாயா? பெறாமலும் தாயாக வாழமுடியும். அவர்களிடமும் தாய்மை பண்பு வெளிப்படும்

**"ஈன்றுஎடுத்தல்"'**
**சூல்புறஞ்செய்தல் குழவியை**
**ஏன்றுஎடுத்தல்""**
**சூல்ஏற்ற கன்னியை, ஆன்ற**
**அழிந்தாளை, இல் வைத்தல்"'-**
**பேர் அறமாஆற்ற**

மொழிந்தார் முதுநூலார்,

கடைசியில் தன் மகளையே கேட்டு விடுவதோடு கண்டித்து வைத்து விட வேண்டும் என்ற தாய்மை உணர்வுடன் ஒருநாள் காலையில் வேலம்மைதன் மகளைப் பார்த்துச் சொன்னாள்.

"தாயறியாத சூல் உண்டா? எம்புள்ளெயப் பத்தி எனக்குத் தெரியுண்டீ" என்றவாறே அருகில் வந்து, ருக்மணியின் முகத்தைக் கரங்களால் அணைத்துக் குழந்தைக்கு முத்தம் கொடுப்பதுபோல் கொடுத்தாள்.(தேநீர்.பக்:199-200)

**முடிவுரை**

நாவலாசிரியர் வாழ்ந்த காலக்கட்டத்தில் சமுதாயத்தில் வாழ்ந்தமக்களது வாழ்க்கையினை நேரில் கண்டு அதனை தனது எழுத்தால் மெருகேற்றி ஒவ்வொரு கதாபாத்திரத்திற்கும் உருவம் கொடுத்து உயிர் கொடுத்து அதில் வெற்றியும் பெற்றிருக்கின்றார்.